மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கண்ணன், கர்ணன், காத்தவராயன், காளிதாசன் என காவியப் பாத்திரங்களையும், கலியுக புருஷர்களையும், கனவு நாயகர்களையும், கண்கண்ட ஞானிகளையும் நம் கண் முன்னே காண வைத்து, ஓவியமாக்கி, காவியமாக்கியவர் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்கள்.*

கட்டபொம்மன், கப்பலோட்டிய தமிழன், பாரதியார் என்றால் அவர்கள் இப்படித்தான் என உருவம் கொடுத்து, மக்கள் மனதிலே பதிய வைத்த அந்த அறிவாளி, அந்த அன்புக்கரம், பச்சை விளக்கு, படிக்காத மேதை, பாசமலர், பாரத விலாசுக்கு, தவப் புதல்வன் அமர தீபத்திற்கு, நான் வணங்கும் தெய்வம், மக்கள் போற்றும் மகராசி, (மேசையைத் தட்டும் ஒலி) கை கொடுக்கும் தெய்வம், கலை உலகைக் காத்திடும் காவல் தெய்வம், அரசு சார்பில் மணிமண்டபம் கட்ட அறிவிப்புச் செய்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சிறந்த அறிவிப்பினை நம் நெஞ்சிருக்கும் வரை அவர் ஒரு சரித்திரம் என்பதை புண்ணிய பூமி மறவாது. மாண்புமிகு அம்மா அவர்களுக்கு இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

4. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஸ்டாலின், என்னவென்று சொல்லுங்கள்.*

***திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் தந்திருக்கக்கூடிய ஒத்திவைப்புத் தீர்மானங்கள் ஏறக்குறைய 22 இருக்கின்றன.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் அறிவிப்பு கொடுத்து 2 நாட்கள்தான் ஆகியிருக்கின்றன. அவை அனைத்தையும் துறைகளுக்கு பதில் கேட்டு அனுப்பியிருக்கிறோம்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *அதிலே முக்கியமாக மேகதாது பிரச்சினை, N.L.C. பிரச்சினை. அதையாவது முன்கூட்டியே எடுத்துக்கொள்ளுங்கள்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் கொடுத்த அறிவிப்புகளையெல்லாம் துறைகளுக்கு அனுப்பியிருக்கிறோம். அது என்னுடைய ஆய்விலே இருக்கிறது. துறைகளிடமிருந்து*

2015 ஆகஸ்ட் 26] [பேரவைத் தலைவர்]

பதில் வர, வர ஒவ்வொன்றாக எடுத்துக்கொள்ளப்படும். அதற்குப் பதில் வந்தவுடன் உறுதியாக நான் எடுத்துக்கொள்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, உட்காருங்கள். எல்லா உறுப்பினர்களும் அதுமாதிரியான கோரிக்கைகளைக் கொடுத்திருக்கிறார்கள், நீங்களும் கொடுத்திருக்கிறீர்கள். பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சபை தொடங்கி இரண்டு நாட்கள்தான் ஆகின்றன. நேற்று முன்தினம்தான் நீங்கள் எல்லோரும் கொடுத்திருக்கிறீர்கள். 2 நாட்கள்தான் ஆகின்றன. பதில் வந்தவுடன் நான் எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் கொடுத்திருக்கிற கோரிக்கைகள் என்னுடைய ஆய்வில் இருக்கின்றன. அவற்றை ஆய்வு செய்ய எனக்கு நேரம் கொடுக்க வேண்டும் இல்லையா? நேற்று, நேற்றைய முன்தினம் வரையிலும் நிறைய பேர் தங்களுடைய கோரிக்கைகளைக் கொடுத்திருக்கிறீர்கள். உங்களுடைய கோரிக்கைகளை, துறையினுடைய பதில் கேட்டு அனுப்பியிருக்கிறேன். துறையிடமிருந்து பதில் வந்தவுடன் ஒவ்வொன்றாக எடுத்துக்கொள்ளப்படும். (குறுக்கீடுகள்) இதுகுறித்து நீங்கள் என்னை வற்புறுத்த முடியாது. (குறுக்கீடுகள்)

முற்பகல் 11-35

மாண்புமிகு உறுப்பினர், திரு. அ. சவுந்தரராசன், நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலினைத்தான் பேச அழைத்திருந்தேன். உங்களைப் பிறகு கூப்பிடுகிறேன். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், டாக்டர் கிருஷ்ணசாமி. (குறுக்கீடுகள்) நான் உங்களுடைய கோரிக்கைகளை எடுத்துக்கொள்கிறேன். இன்றைக்கு நேரம் இல்லை. துறைகளிடமிருந்து பதில் வராமல் எவ்வாறு எடுத்துக்கொள்ள முடியும்? துறைகளுக்குப் போய் இருக்கிறது. துறைகளிடமிருந்து அரசுக்கு பதில் வந்தவுடன் அவை முறையாக எடுத்துக்கொள்ளப்படும். (குறுக்கீடுகள்) உங்களுடைய வற்புறுத்தல்களுக்காக அவ்வாறெல்லாம் எடுத்துக்கொள்ள முடியாது. முறையாகத்தான் செய்யப்படும். (குறுக்கீடுகள்) இல்லை, நீங்கள் கோரிக்கை வைத்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) அவையெல்லாம் என்னுடைய ஆய்வில் இருக்கின்றன. (குறுக்கீடுகள்) என்னுடைய ஆய்வில் இருப்பவற்றை நீங்கள் இவ்வாறு வற்புறுத்தி பேச முடியாது. நான் ஒவ்வொன்றாக எடுத்துக்கொள்கிறேன். உட்காருங்கள். திரு. அ. சவுந்தரராசன், என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

[2015 ஆகஸ்ட் 26

திரு. அ. சவுந்தரராசன்: *நெய்வேலியில் 38 நாட்களாகப் போராட்டம் நடந்துகொண்டிருக்கிறது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அது குறித்து நேற்றுதான் நீங்கள் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். அது குறித்து பதில் வந்தவுடன் நான் எடுத்துக்கொள்கிறேன்.*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். அவற்றிற்கு பதில் வரட்டும், நான் எடுத்துக்கொள்கிறேன். திரு. ஆறுமுகம், நீங்கள் பேசுங்கள்.*

திரு. எம். ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலியில் 38 நாட்களாக ஊதிய உயர்வு சம்பந்தமாக வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றார்கள். மத்திய அரசு தலையிட்டு உடனடியாக அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். தமிழக அரசு உடனடியாக அதற்கு உதவி செய்ய வேண்டும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசு அதுகுறித்து நடவடிக்கை எடுக்கும். நீங்கள் நேற்றுதான் இதுகுறித்து அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். துறையிடமிருந்து பதில் வரட்டும். நான் எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)*

திரு. ஆர். சின்னசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,** (குறுக்கீடுகள்)*

செல்வி கே. பாலபாரதி: ** *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அப்படியெல்லாம் சொல்ல முடியாது. (குறுக்கீடுகள்) துறைகளிடமிருந்து முறையான பதில் வந்தவுடன் நான் எடுத்துக்கொள்கிறேன். முறையான பதில் வந்தால், அதுகுறித்து அரசுக்குத் தெரிவிக்கச் சொல்கிறேன்.*

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2015 ஆகஸ்ட் 26] [பேரவைத் தலைவர்]

திரு. அ. சவுந்தரராசன் (குறுக்கீடுகள்) திரு. எம் ஆறுமுகம், (குறுக்கீடுகள்) முறையான பதில் வரவேண்டும். பதில் வந்தால்தான் நான் எடுத்துக்கொள்ள முடியும். அவையில் நீங்கள் இவ்வாறு கேட்டவுடன் எடுத்துக்கொள்ள முடியாது. (குறுக்கீடுகள்)

(இந்திய கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்ட்), இந்திய கம்யூனிஸ்டு கட்சி, இந்திய தேசிய காங்கிரஸ், பாட்டாளி மக்கள் கட்சி, மனிதநேய மக்கள் கட்சி உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

திரு. எம். ஆறுமுகம், திரு. அ. சவுந்தரராசன், நான் சொல்வதைக் கேளுங்கள். (குறுக்கீடுகள்) துறையிடமிருந்து முறையான பதில் வரட்டும். நான் அவையில் வைக்கச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) இன்று தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை சம்பந்தமான மானியக் கோரிக்கைதான் இருக்கிறது. அப்பொழுது பேசுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பதில் வரட்டும். நீங்கள் மானியக் கோரிக்கையில் பேசுங்கள். மானியக் கோரிக்கைகள் இருக்கின்றன. அப்பொழுது பேசுங்கள். அப்பொழுது உங்களுடைய கட்சி உறுப்பினரைப் பேசச் சொல்லுங்கள். இப்பொழுதுதானே அதுபற்றி கொடுத்திருக்கிறீர்கள். பதில் வரட்டும். நான் எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) இப்படி நீங்கள் பேசுவது முறையல்ல. மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். உங்களுடைய கட்சி உறுப்பினரைத்தான் பேசச் சொல்லியிருக்கிறேன். திரு. பாலகிருஷ்ணன், நீங்கள் உட்காருங்கள். திரு. டில்லி பாபு, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

(இந்திய தேசிய காங்கிரஸ் உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் சேஷசமுத்திரம் கிராமத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள்மீது நடைபெற்றிருக்கக்கூடிய கடுமையான தாக்குதல். ஒரு வாரத்திற்கு மேல் ஆகிவிட்டது. (மணியடிக்கப்பெற்றது) அது குறித்து கவன ஈர்ப்பு கொடுத்திருக்கிறேன்.

[2015 ஆகஸ்ட் 26

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அதுகுறித்து, நீங்கள் அறிவிப்பு கொடுத்து, முறையான பதில் வந்ததற்குப் பின்னால், உங்களுக்குப் பதில் சொல்கிறேன். நீங்கள் உட்காருங்கள். திரு. ஆறுமுகம், உங்களுக்கு முன்பே சொல்லிவிட்டேன். திரும்பவும் என்ன சொல்ல வருகிறீர்கள்? சொல்லுங்கள்.*

திரு. எம். ஆறுமுகம்: *அவர்களுடைய வீடுகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டிருக்கின்றன. அவர்கள் வெளியே நடமாட முடியாத சூழ்நிலை உருவாகியிருக்கின்றது. மேல் ஜாதி இந்துக்கள், அப்படிப்பட்ட துரோகத்தைச் செய்திருக்கிறார்கள். அது சம்பந்தமாக விவாதத்திற்கு எடுத்துக்கொள்ள வேண்டும்.*

முற்பகல் 11-40

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் உட்காருங்கள். துறையிடமிருந்து பதில் வந்தவுடன் நான் எடுத்துக்கொள்கிறேன். நீங்கள் சொன்னதை நான் பதிவு செய்திருக்கிறேன். (குறுக்கீடுகள்) முறையான பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா (குறுக்கீடு) என்னவென்று சொல்லுங்கள்? (குறுக்கீடுகள்) நீங்கள், இப்படி வந்து நிர்ப்பந்தம் செய்யக்கூடாது. ஒவ்வொன்றாகத்தான் எடுத்துக்கொள்வோம். (குறுக்கீடுகள்) எப்படி எல்லாவற்றையும் ஒரே நேரத்தில் எடுத்துக்கொள்ள முடியும்? (குறுக்கீடுகள்) நீங்கள் ஒரு புத்தகம் அளவில் கொடுத்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்). இரண்டே நாட்களில் எப்படி எடுத்துக்கொள்ள முடியும்? (குறுக்கீடுகள்) இரண்டு நாட்களில் எப்படி எடுத்துக்கொள்ள முடியும்? (குறுக்கீடுகள்) இரண்டு நாட்களில் எடுத்துக்கொள்ள முடியாது. பேசாமல் இருங்கள். (குறுக்கீடுகள்) முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, என்னவென்று சொல்லுங்கள்?*

(இந்திய கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்ட்), இந்திய கம்யூனிஸ்டு கட்சி உறுப்பினர்கள் மற்றும் பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் ஆகியோர் அவையிலிருந்து வெளியேறினர்.)

***முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டம், சேஷசமுத்திரத்தில் நடைபெற்ற சம்பவம் தொடர்பாக கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம்.*

2015 ஆகஸ்ட் 26]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. பதில் வந்தவுடனே சொல்கிறேன். (குறுக்கீடு) டாக்டர் கிருஷ்ணசாமி, என்னவென்று சொல்லுங்கள்? (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி, சொல்லுங்கள்.

(மனித நேய மக்கள் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

டாக்டர் க. கிருஷ்ணசாமி: **

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதெல்லாம் அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடு) அதுசம்பந்தமாகப் பேச முடியாது. (குறுக்கீடு) அதுசம்பந்தமான மானியக் கோரிக்கைமீது பேசுங்கள். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) மானியக் கோரிக்கை வரும்போது பேசுங்கள். உட்காருங்கள். (குறுக்கீடு)

குழுக்களின் அறிக்கை அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர். (குறுக்கீடு) உட்காருங்கள். அவ்வளவுதான். (குறுக்கீடு) இதுமாதிரியெல்லாம் பேசக் கூடாது. (குறுக்கீடு) இப்படி முறையில்லாமல் பேசக் கூடாது, உட்காருங்கள். (குறுக்கீடு) முறையில்லாமல் பேசக் கூடாது, உட்காருங்கள். (குறுக்கீடு) நான் வாய்ப்புக் கொடுத்துவிட்டேன். உட்காருங்கள். (குறுக்கீடு) ஏற்கெனவே நீங்கள் பேச வாய்ப்புக் கேட்டீர்கள், உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்துவிட்டேன். திரும்பத் திரும்ப அப்படியெல்லாம் வாய்ப்புத் தர முடியாது. உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. பி.வி. கதிரவன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) என்னுடைய அனுமதியில்லாமல் பேசக் கூடாது. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) அனுமதியில்லாமல் பேசக் கூடாது. உட்காருங்கள். (குறுக்கீடு)

(புதிய தமிழகம் கட்சி உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவையிலிருந்து வெளியேறினார்.)

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.